★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 23 ஜ. அல். 21 இதழ் 25

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7—3—83

★ துண்டுவிழும் 2,885 கோடி ரூபா:

## சமாளிக்கும் யோசனையை றெனி நாளை வெளியிடுவார்!

(கொழும்பு)

நிதி அமைச்சர் திரு. றொனி டி மெல் நாளை செவ்வாய்க்கிழமை இவ்வாண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையை நிகழ்த்துவார்.

நிதி அமைச்சர் திரு. டி மெல் ஏற்கனவே மந்திரிசபையிலும் பாராளுமன்றத்திலும் சமர்ப்பித்திருந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வரவு 2 080 கோடி ரூபா என்றும் செலவு 4965 கோடி ரூபா என்றும் 2885 கோடி ரூபா துண்டு விழுகிறது என்றும் தெரிவித்திருந்தார்.

வருமானத்துக்கான வழி வகைகள். செலவுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள், துண்டுவிழும்தொகையைச் சமாளிப்பதற்கான நடைமுறைகள் தொடர்பான ஆலோசனைகளை திரு டிமெல் நாளை சபையில் தெரிவிப்பார்.

பிற்பகல் 2 மணிமுதல் 5 மணிவரை அவர் பட்ஜட் உரையை நிகழ்த்தினாலும் தேநீர் இடைவேளைக்குப் பின்னரே (4-30 மணிக்குப் பின்னரே) உடனடியாக அமுலுக்கு வரக்கூடிய முக்கியமான பல விலை அதிகரிப்பு, புதிய வரிவிதிப்பு ஆகியவற்றை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பட்ஜட்டின் 2-வது வாசிப்பு 10-ம் திகதி ஆரம்பமாகி 7 நாட்கள் வரை விவாதம் இடம்பெற்ற பின்னர், 18-ம் திகதி வாக்கெடுப்பு இடம் பெறும். 21-ம் திகதி முதல் இது குழு நிலையில் ஆராயப்பட்டு ஏப்ரல் 5-ம் திகதி 3-வது வாசிப்புக்கான வாக்கெடுப்பு இடம் பெறும், வழமையாக 'பட்ஜட்' மீதான குழுநிலை விவாதம் 19 நாட்களே நடைபெறும். இம்முறை 10 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நவம்பரில் 84-ம் ஆண்டுக்கான பட்ஜட் சமர்ப்பிக்கப்படும். ஆதாவது இவ்வாண்டில் இரண்டு பட்ஜட்.

★ யாழ். சிறைச்சாலைகளிலிருந்து

# ஆறு கைதிகள் தப்பி ஓட்டம்!

## நேற்றுக்காலை சம்பவம்

### சிறைக்காவலர் இருவர் தற்காலிக நீக்கம்

(ஏ. வி. மாணிக்கம்)

கொள்ளை-வழிப்பறி கொலைச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளில் சிறை வைக்கப்பட்டிருந்த ஆறு கைதிகள் நேற்றுக் காலை பத்து மணியளவில் தப்பிஓடி விட்டனர்!

யாழ். சிறையிலிருந்து நால்வரும், இருவர் கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலையிலிருந்தும் தப்பி ஓடியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய கைதிகளில் இருவர் யாழ். சிறையிலிருந்து கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலைக்கு அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

**இருவர் தற்காலிக வேலைநீக்கம்**

சிறைக் கைதிகள் தப்பியோடியது சம்பந்தமாக விசாரணை செய்த வடபகுதி சிறைச்சாலைகளின் பொறுப்பதிகாரி சுப்பிரிண்டன்ட் திரு. எஸ் சத்தியமூர்த்தி சம்பவநேரத்தில் கடமையிலிருந்த சிறைச்சாலை காவலர் ஜெயிலர்) இருவரை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்துள்ளார்.

யாழ் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய நான்கு கைதிகளின் விபரம் வருமாறு!

சிவராமலிங்கம் என்றழைக்கப்படும் எஸ். சிவலிங்கம், எச், ஆர் பி. ஜினதாஸ, எஸ். ஆர். லக்ஷ்மன், ஆர் பி. குணசேகர ஆகியோர் யாழ். சிறையிலிருந்து தப்பி ஓடியவர்களாகும்.

கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடிய கைதிகள் விபரம்; எச். எம் வில்பேட் ராஜபத்திரன இவர்களிருவரையும் விடுதலை செய்ய ஒருவருட காலம் இருக்கிறதென்றும், யாழ். சிறைச்சாலையில் நன்னடத்தை உள்ளவர்களாக இருந்த காரணத்தால் பொது மக்களுடன் நல்லுறவு கொண்டிருப்பதற்காக கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலைக்கு அண்மையில் அனுப்பப்பட்டவர்கள் என்றும சிறைச்சாலை சுப்பிரிண்டன்ட் திரு. எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றுக்காலை பத்துமணியளவில் யாழ். சிறைச்சாலையி

(8-ம் பக்கம் பார்க்க)

அணிசேரா மகாநாடு:

## 'பொருளாதாரப் பிரச்னைக்கே முக்கியத்துவமளிக்கவும்'

### ஜனாதிபதி ஜே. ஆர். கோருகிறார்

(புதுடில்லி)

புதுடில்லியில் இன்று ஆரம்பமாகவுள்ள அணிசேரா நாடுகளின் 7-வது உச்சி மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து உரையாடியபோது இம்மாநாட்டில் கம்பூச்சிய விவகாரம், படைக் குறைப்பு, சமாதானத்திற்கான வழிவகைகள் ஆகிய விடயங்களிலும் பார்க்க, பொருளாதாரப் பிரச்னைகளுக்கே முக்கியத்துவமளிக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா இந்திய பிரதமரைக் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் இக்கருத்திற்கு, இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தியும் ஆதரவு தெரிவித்துள்ளார். (வெ)

## உமையாள்புரம் சம்பவம்

(கிளிநொச்சி)

உமையாள்புரம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் உமையாள்புரம் கோவிலுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த வானிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பெற்றோல் குண்டுகள், டைனமைற் மற்றும் வெடி மருந்துவகைகளைப் பரிசோதிக்க கொழும்பிலிருந்து இரசாயனப் பரிசோதகரான திரு. ஜெகதீஸ்வரன் நேற்று கிளிநொச்சி வந்துள்ளார்.

**லொறி ஒப்படைக்கப் பட்டது**

துப்பாக்கி இளைஞர்களால் கடத்தப்பட்ட லொறி மீண்டும் அனுராதபுரம் ப. நோ.

(8-ம் பக்கம் பார்க்க)

## காடுகளில் தேடுதல் வேட்டை

(வவனியா)

உமையாள்புரம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்தொடர்பாக சந்தேகநபர்களைக் கண்டுபிடிப்பதில் ''கொமாண்டோ'படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான், கிளிநொச்சி மாங்குளம் காடுகளில் பரந்தளவில் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

வவனியா விமானத் தளத்தில் நேற்று அதிகாலை இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான 7 விமானங்கள் வந்திறங்கியதாகத் தெரிகிறது. இவ் விமானங்கள் தேடுதல்வேட்டைக்கு வந்திருக்கலாமென்றே நம்பப்படுகிறது. (சு)

அராலிக் கடலில்

## 17 சிறகுவலைகள் சேதம்: மீனவர்கள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

அராலிக் கடலில் சிறகு வலைகள் சேதப்படுத்தப்பட்டதால் பதினேழு மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சாவக்காடு மீனவர்களுக்குச் சொந்தமான 34,000 ரூபா பெறுமதியான பதினேழு சிறகு வலைகள் அராலிக் கடலில் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் பரிசோதகர் திரு. இ. கணநாதனுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இடத்தை நேரில் அவர் பார்வையிட்டதுடன் இதுசம்பந்தமாக பொலிஸ் உயர் அதிகாரிகளிடமும் புகார் செய்துள்ளார்.

சாவக்காடு கடற்றொழிலாளர் விரிவாக்க சங்கத் தலைவர் திரு. சு. தெய்வேந்திரமும் சிறகு வலைகள் சேதப்படுத்தப்பட்டது சம்பந்தமாக புகார் செய்துள்ளார். வலைகள் சேதப்

(8-ம் பக்கம் பார்க்க)

உ

கணபதி துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் திருவருளை முன்னிட்டு நிகழும் துந்துபி வருஷம் மாசி மாதம் 25-ஆம் திகதி (9-3-83) புதன்கிழமை காலை 6 மணி முதல் 7 மணி வரையில் வரும் கன்னி லக்கனத்தில்

| | |
|---|---|
| ஈசனக்குடி சாமிப்பிள்ளையின் சகோதரர்லேட் வைத்தியநாதபிள்ளையின் குமாரன் திருநிறைச் செல்வன் **வெங்கடேஸ்வரனுக்கும்** | எனது சகோதரன் முத்துக்காயாரோகணம் செட்டியாரின் இளைய குமாரத்தி திருநிறைச்செல்வி **ரேனுகாதேவிக்கும்** |

யாழ். வண்ணை வலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர ஸ்வாமி கோவிலில் நிகழவிருக்கும் திருமணத்திற்கு தாங்களும் தங்கள் சுற்றஞ் சூழலும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| தங்கள் | தங்கள் |
| சாமி ஐயாபிள்ளை, (ஈசனக்குடி) | வை. கந்தப்பச் செட்டியார், (வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானம், யாழ்ப்பாணம்) |

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| A. அப்பாபிள்ளை, (ஈசனக்குடி) | வை. கந்தப்பச் செட்டியார், |
| V. அப்பாசாமி, (சிங்கப்பூர்) | வை. முத்துக்காயாரோகணம்செட்டியார், |
| | வை. சுந்தரலிங்கம் செட்டியார். |

6444

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் பன்றிவிழுந்தான், முதலைப்பிட்டி வயல் நெற்பரப்பு 15 3/8 உம், காந்தாளம் புட்டிவயல் மரக்கார ரங்கனி நெற்பரப்பு 38 1/4 உம், செம்பாடு வளவு நிலப்பரப்பு 5 உம் உடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6403, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6403

இணுவில் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் உள்ள நியூ காலிங்கன் தியேட்டரும் அதனோடுள்ள 8 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. இது சகல விதமான தொழில்களும் செய்வதற்கேற்ற இடம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: வ. காலிங்கராஜா, பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 6428

சொந்தப் பாவிப்பிலுள்ள சோமசெற் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 32, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 6446

## வகுப்புகள்

உங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தைப் பிரபல கலாநிதி பார்மரின் நவீன முறையில் இலக்கண ரீதியாக, பேசி, எழுதி, வாசித்து நாளுக்குநாள் முன்னேறவேண்டுமாயின் 263, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை நாடுங்கள். 5-ம் வகுப்புத் தொடங்கி G.C.E. (O/L) வரைக்கும் இம்முறையில் முன்னைநாள் பாடசாலை ஆசிரியரும், ஆசிரியகலாசாலை, சர்வகலாசாலை விரிவுரையாளருமான திரு. இ. டேவிட் அவர்களால் நடாத்தப்படுகிறது. 6416

## வைத்தியம்

மனநோய், வலி, எக்ஸிமா எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். Dr. V. T. சந்திரன் 218/5 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 6374


# மன்னார் செய்திகள்

''கத்தோலிக்க மக்களின் திருநாளான பெரியவெள்ளி தினத்தன்று மதுக் கடைகளையும் கேளிக்கை நிலையங்களையும்மூடுவதற்கானநடவடிக்கைகளை மேற்கொள்ளவும்'' என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைக் கோருவதென ஆசிரியர் சமூகசேவா சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## நூல்நிலையத்திற்கு பத்திரிகைகள்

மன்னார் இலுப்பைக்கடவை உப அலுவலகத்திலிருந்து மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு எடுத்துவரப்பட்ட 'ரோனியோ' இயந்திரம் மீண்டும் இலுப்பைக்கடவை உப அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இத்துடன் இலுப்பைக்கடவை பொது நூல்நிலையத்திற்கு வேண்டிய பத்திரிகைகளும் அனுப்பிவைக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை மாவட்டச்செயலாளர் மேற்கொள்ளுவாரென மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. பீ. எம். செபமாலை தெரிவித்தார்.

## செயலாளராக கடமை

மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. ச. எம் செபமாலை தலைமையில் பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தின் மாவட்டச்செயலாளராக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூல் கடமையாற்றினார்.

## தொழில் பயிற்சி

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 10 இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒட்டுவேலை, வாகனம், பழுதுபார்த்தல் ஆகிய பயிற்சிக்கு 4 பேரும், அச்சுக் கோர்த்தலுக்கு 3 பேரும், தாதிப் பயிற்சிக்கு 3 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மாடு வெட்டும் தொழுவம்

எருக்கலம்பிட்டியில் சுமார் 5 ஆயிரம் ரூபா செலவில் மாடு வெட்டும் தொழுவம் ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது. இம் மாடுவெட்டும் தொழுவம் மன்னார் மாவட்டஅபிவிருத்திசபையினால் அமைக்கப்பட்டுவருகிறது.

## மறுபரிசீலனை செய்ய கோரிக்கை

''எருக்கலம்பிட்டி குழாய் நீர் விநியோகத்தின் வரி அதிகரிப்பை மீண்டும் பரிசீலனை செய்து வரி அதிகரிப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும்'' என்று கோரும் மகஜரை எருக்கலம்பிட்டி கிராமோதய சபைத் தலைவரும், மன்னார் பிரதேச சபைத் தலைவருமான ஜனாப் எம். ஏ. கபூர் உள்ளூராட்சி அமைச்சுக்கும், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

## இலவசபாட புத்தகங்கள்

மன்னார்மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கவென இரண்டாவது தொகுதி பாடப்புத்தகங்கள் மன்னார் கல்வித்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. இப் பாடப் புத்தகங்கள் மன்னார் கல்வித்திணைக்களத்திலிருந்து மன்னார், முசலி, மாந்தை கல்வி வட்டாரங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## மீன்பிடி படகுகள்

மன்னார்-வங்காலைப் பகுதியைச் சேர்ந்த ஏழை மீனவர்களுக்கு நன்னீர் மீன்பிடித் திட்டத்தின்கீழ் கடல்தொழில் திணைக்களத்தினால் 18 மீன்பிடி படகுகள் வழங்கப்படும்.

வங்காலைபுனித ஆனாள் கடல் தொழில் விரிவாக்கச் சங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே ஏழை மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள் வழங்கப்படவுள்ளது.

## மன்னார் சாரணர்கள்

அனுராதபுரத்தில் நடந்த மூன்றாவது சாரணர் விழாவில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 32 சாரணர்களும், 4 ஆசிரியர்களும் கலந்துகொள்கின்றனர். இவர்களுக்கான பயிற்சி புனித சவேரியார் கல்லூரியில் நடைபெற்றது.

## மா.ச.தலைவருக்குமகஜர்

எருக்கலம்பிட்டிப் பகுதி மக்களின் நலன்கருதி எருக்கலம்பிட்டி குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிக்கவும்'' என்று கோரும் மகஜர் ஒன்றினை எருக்கலம்பிட்டி கிராமோதய சபைத் தலைவரும், மன்னார் பிரதேச சபைத் தலைவருமான ஜனாப் எஸ். ஏ. கபூர் மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. பீ. எம். செபமாலைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## அவசர வேண்டுகோள்

முசலிப் பகுதியில் போதிய நீர்ப்பாசன வசதியில்லாது நாசமடையும் நிலையிலுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காலபோக விவசாயத்தைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும்'' என்றுகோரும் அவசர வேண்டுகோள் ஒன்றை முசலிப் பகுதியைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராமோதய சபைகள், சன சமூக நிலையங்கள், முஸ்லிம் ஸ்தாபனங்கள் ஆகியன காணி காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவுக்கு அனுப்பிவைத்துள்ளன.

## பேசாலைக்கு மின்சாரம்

பேசாலைப் பகுதியில் மின்சாரத்தைப் பெற விரும்பும் பாவனையாளர்கள் தமது விண்ணப்பத்தைப் பேசாலை உப அலுவலகத்திற்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். மின்சாரத்தைப் பெறவிரும்பும் பாவனையாளர்கள் தமக்கு வேண்டிய விண்ணப்பப் படிவங்களை 5 ரூபா செலுத்தி பேசாலை உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

## தலைவர் ராஜினமா

நானாட்டான் கிராமோதய சபைத் தலைவர் திரு. ரி மரியநாயகம் தமது கிராமோதய சபைத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். நானாட்டான் கிராமோதய சபைக் கூட்டங்களுக்கு கிராமோதய சபை உறுப்பினர்கள் சமூகமளிக்காததாலேயே தமது பதவியை ராஜினாமாச் செய்தார். (க)

# சங்கானையில் கோதுமை அறுவடை விழா!

(பண்டத்தரிப்பு)

தொல்புரம்விவசாயப்போதனாசிரியர் பிரிவில் கோதுமை அறுவடை விழாவும் ''கோதுமை உற்பத்தி வீரர்'' பட்டமளிப்பு விழாவும் இம்மாதம் 9-ம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள சங்கானை கிழக்கு தொட்டிலடியில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். பிரதேச உதவி விவசாயப் பணிப்பாளர் திரு செ. ஜெயரத்தினம்கலந்துகொண்டு கோதுமைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு நல்ல விளைச்சலைப்பெற்ற விவசாயிக்கு ''கோதுமை உற்பத்தி வீரர்'' என்ற பட்டத்தை வழங்குவார்.

தொழிலதிபர் திரு. க. கனகராசா இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வார்.

இதற்கான ஒழுங்குகளை தொல்புரம்விவசாயபோதனாசிரியர் திரு ஏ. ஜெயவீரசிங்கம், பண்டத்தரிப்பு விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் திரு. வை. பாலகிருஷ்ணன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (க)

பலாலி கொலைவழக்கு:

# சட்டவைத்திய அதிகாரி வராததினால் ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

பலாலி கொலை வழக்கு விசாரணை, சட்டவைத்திய அதிகாரி சமுகமளிக்காமையால் ஏப்ரல் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பலாலியைச் சேர்ந்த ஆறு

[5-ம் பக்கம் பார்க்க]


வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு

26% தொடக்கம் 30% வரை

வட்டி கொடுக்கப்படும்.

குறைந்த தொகை ரூபா 1000/-

விபரங்களுக்கு:

யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிற்.

3, நவீனசந்தை (மேல்மாடி)

யாழ்ப்பாணம்.

போன்: 23698

எமது மற்றுமொரு சேவையில்...

யாழ் குடாநாட்டின் எப்பகுதியிலும்

(i) வீடுகள்
(ii) வீடு கட்டக்கூடிய காணிகள்
(iii) கட்டடங்கள்
(iv) தோட்டங்கள்

தேவையாயின் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

பினான்ஸ் வசதியுமுண்டு.

விபரங்களுக்கு;

த பினான்ஸ் கொம்பனி லிமிற்றட்

(REAL ESTATE DIVISION)

249, மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23680

லங்கா சீமெந்து லிமிட்டெட்,

காங்கேசன்துறை.

ரெண்டர் இல: LCL/K/ST/01/83

காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட் தாபனத்துக்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான சீல் வைக்கப்பட்ட ரெண்டர்கள் கோரப்படுகின்றன.

1. சல்லி (கருங்கல்) 3/4'', 1½''
2. சுண்ணாம்புக்கல் 5/8'', 3/4'', 1'', 1½''
3. ஆற்றுமணல்
4. நுண்மணல் (Fine Sand)

மீளப்பெற முடியாத ரூபா 50/- வைப்புப்பணம் செலுத்தி காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட் வழங்கல் உத்தியோகத்தரிடமிருந்து தேவையான ரெண்டர் பத்திரங்களைப் பெறலாம்.

ரெண்டர் முடிவுத்திகதி: 1983-03-18 பிற்பகல் 2-30 மணி.

ரெண்டர் பத்திரங்கள் 1983-03-16-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,

லங்கா சீமெந்து லிமிட்டெட்,

காங்கேசன்துறை.

1983-03-02. (6413)

சென்னை-ரூபவாகினி

நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டு களிக்க தொலைக்காட்சி ஏரியல் அமைப்பதற்கு...

வீனஸ் நியூவீனஸ்

ரி.வீ., ரேடியோ உத்தரவாதத்துடன் மணிக்கூடுகளை பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரி.வி, ரேடியோ, மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

விரும்பிய பாடல்களை பதிவு செய்துகொள்ளவும்



மற்றும்மங்களவைபவங்களை வீடியோவில் படம்பிடித்துக் கொள்ளவும்

மேலும் யாழ் நகரில் உத்தரவாதத்துடன் ரி-வீ ஏரியல் பொருத்திக்கொள்ள

வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி ஸ்ரீதர் தியேட்டர் அருகில் யாழ்ப்பாணம்

நியூ வீனஸ் 79/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# இன்று ஆரம்பமாகும் அணிசேராமாநாடு கம்பூச்சிய ஆசனம் காலியாக இருக்கும்!

## வெளிவிவகார அமைச்சர்கள் முடிவு

புதுடில்லி, மார்ச். 6

இன்று ஆரம்பமாகும் அணிசேரா இயக்கத்தின் ஏழாவது உச்சி மகா நாட்டில் கம்பூச்சியாவின் இடம் வெற்றிடமாகவே இருக்கும்.

கடந்த மூன்று தினங்களாக உச்சி மகாநாட்டில் கம்பூச்சிய நிலை பற்றி அணிசேரா இயக்க வெளிவிவகார அமைச்சர்கள் இரவு நெடுநேரம் வரை கருத்துக்களைப் பரிமாறினார்கள்.

இந்த வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்துக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் தலைமை வகித்தார்.

கம்பூச்சிய விவகாரத்தை இப்போதைக்குக் கைவிடுவதென்றும், மகாநாட்டில் அதன் இடத்தைக் காலியாக வைத்திருப்பதென்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

இந்த யோசனையை அங்கத்தவர்கள் பலரும் ஏற்றுக் கொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர்களின் நேற்றைய இறுதிக்கூட்டம் மாலையிலேயே ஆரம்பமானது. பின்னர் இரவுநீண்ட நேரம் வரை அது தொடர்ந்தது. இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் கம்பூச்சிய விவகாரம் தொடர்ந்து இழுபறி நிலையிலுள்ளதென்றும், 1985ல் நடைபெறும் 8வது மகாநாட்டில் அதன் நிலை பற்றி தீர்க்கமான முடிவு எடுக்கப்படுமென்றும், அவ்வாறு முடிவு எடுப்பதற்கு அணிசேராஇயக்க ஒருமித்கிணைப்புக் குழு தொடர்ந்து முயற்சிகளை எடுக்குமென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை கம்பூச்சியவெளி விவகார அமைச்சர் திரு. ஹென்சன் பாரிஸில் வைத்து கருத்துத் தெரிவிக்கையில், கம்பூச்சியாவின் இடம் 7வது உச்சிமகாநாட்டில் காலியாக இருப்பதையே விரும்புகிறேன். அத்துடன் கம்பூச்சியநிலை குறித்து சமரச நிலை விரைவில் தோன்றவேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறேன். அணிசேரா இயக்கத்தினுள் கம்பூச்சிய விவகாரம் தொடர்பாக பிரிவினைகள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை என்றார்.

"இதேவேளை தற்போதைய கம்பூச்சிய அரசுக்கு ஆட்சிப் பொறுப்பை தொடர்ந்தும் வகிக்க பூரணஉரிமையுண்டு என்பதையும் குறிப்பிடுகிறேன்" என்றும் அவர் கருத்து வெளியிட்டார். (கி)

## ஜே. ஆர். இந்திரா சந்திப்பு!

புதுடில்லி, மார்ச், 6

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தினர்.

ஈரான் – ஈராக் யுத்தம் தொடர்ந்து நீடிப்பது கவலையளிக்கின்றது என்றும், தற்போதைய அணிசேரா நாடுகளின் முக்கிய பிரச்னை பொருளாதார ரீதியிலானது என்றும் எனவே அணிசேரா நாடுகள் தமது வளர்ச்சி கருதி சிறந்த பொருளாதாரத் திட்ட யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்றும் ஆலோசனை தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜயவர்த்தன ஆப்கான், கம்பூச்சிய விவகாரங்கள் குறித்தும் பிரதமர் காந்தியுடன் உரையாடினார். ஆயினும் அப்பிரச்னைகளுக்கு அவர் அதிகளவு முக்கியம் தரவில்லை.

இலங்கையிலிருந்து பம்பாய் வந்து அங்கு மூன்று தினங்களை ஜனாதிபதி கழித்தார். பின்னர் அங்கிருந்து விசேட விமானப் படை விமானத்தில் அவர் புதுடில்லி பாலம் விமான நிலையம் வந்தடைந்தார்.

திரு. ஜயவர்த்தனவை இந்திய ஜனாதிபதி ஸெயில்சிங் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார். செங்கம்பள வரவேற்புடன் முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையும் அவருக்கு வழங்கப்பட்டது. (கி)

ஈரான் பிரதிநிதிகளுடன்

## விசேட விமானத்தில் 'புலட்புறாவ்' கார், கமாண்டோ வீரர்கள்!

புதுடில்லி, மார்ச். 6

புதுடில்லி வந்துள்ள ஈரான் நாட்டு அணிசேரா மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

ஈரானின் விசேட விமானப் படை விமானமொன்றுஇதன் பொருட்டு இரு தினங்களுக்கு முன்னர் புதுடில்லி வந்துசேர்ந்தது. இவ்விமானத்தில் பிரதிநிதிகள் செல்வதற்கான ரவைகள் துளைக்கமுடியாத 'புலட் புறாவ்' கார் ஒன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்துடன் சுமார் நூறு கமாண்டோவீரர்களும் அந்த விமானத்தில் வந்துள்ளனர்.

ஈராக் ஜனாதிபதி ஹுசைனும் தமது பாதுகாப்புக்கருதி தம் நாட்டு மெய்க்காப்பாளர்கள் பலரை அழைத்துவந்தது தெரிந்ததே. அவ்வாறு அழைத்துவரப் பட்டவர்களின் எண்ணிக்கை 150 என்று தெரிவிக்கப்பட்டது.

மகாநாட்டில் கலந்து கொள்ளவரும் வேறு சில தலைவர்களும் தமது சொந்த மோட்டார் கார்களையே உபயோகத்துக்கென புதுடில்லி கொண்டு வந்துள்ளனர். இக்கார்கள் பல 'புலட் புறாவ்' அமைப்புடையனவாகும், (கி)

## "பாரதூரமான தாக்கங்களை 'பட்ஜட்' ஏற்படுத்தும்!

### – அமிர்தலிங்கம்

(சாவெட்டி நிருபர்; எம். சுபேந்திரன்)

'பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தால் மக்களுக்கு மிக மிகப் பாரதூரமான தாக்கங்கள் ஏற்படப் போகிறது' என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய பாலர் பிரிவிற்கான புதியகட்டிடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வீ. கே. ஈசுரபாதம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'இன்று எமது பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை நோய் பீடித்துள்ளது. இப்பற்றாக் குறையினால் தமிழ் மக்களது கல்வி நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

'கடந்த வருடம் 5 ஆயிரம் ஆசிரியர்கள் எடுக்கப்பட்டார்கள். இவர்களில் தமிழ் ஆசிரியர்கள் மிகக்குறைவு. வருடம்தோறும் சேவையில் இருந்துவிட்டுச் செல்லும் ஆசிரியர்கள், இளைப்பாறும் ஆசிரியர்களின் வெற்றிடங்களும் நிரப்பப்படாத நிலையிலேயே இருந்து வருகிறது. மாணவர் தொகை கூடிவரும் காலத்திற்கேற்ப ஆசிரியர் நியமனம் நடைபெறுவதில்லை இவை எல்லாம் எம்மைப் பாதித்து வருகிறது.

'பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகிறது இது ஜனாதிபதியினதும், நிதி அமைச்சரதும் உட்கருத்துக்களைக் கொண்டதாக வருகிறது. நான் அறிந்த வரையில் இந்த வரவு செலவுத் திட்டம் மிகமிகப் பாரதூரமான தாக்கங்களை மக்களுக்கு ஏற்படுத்தப் போகிறது.

எமது மக்களைப் பொறுத்த மட்டில் கட்டிடத்திலோ, பல்கலைக் கழகப் பிரவேசத்திலோ வேலைவாய்ப்பிலோ பெரிதும் புறக்கணிக்கப்பட்டே வருகிறார்கள்.

உடுப்பிட்டி எம். பி. திரு. க. இராசலிங்கம் யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ஆகியோர் புதிய கட்டிடத்தை திறந்து வைத்தனர். விழாவில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், மாவட்ட நீதிபதி திரு. ரீ. கே. என். திலகன் உட்பட பலர் உரையாற்றினார்கள், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

## அணிசேரா மகாநாடு புதிய இரு முத்திரைகள்

புதுடில்லி மார்ச். 6.

7–வது அணிசேரா உச்சி மகாநாட்டை முன்னிட்டு இந்தியா இருபுதிய முத்திரைகளை வெளியிட்டுள்ளது. இவற்றின் பெறுமதி முறையே ஒரு ரூபா, இரண்டு ரூபா ஆகும்.

இந்த முத்திரைகளில் ஒன்றில் மகாநாட்டுச் சின்னம் காணப்படுகிறது. மற்றையதில் இந்திய முன்னாள் பிரதமரும், அணிசேரா இயக்க ஸ்தாபகர்களில் ஒருவருமான ஜவஹர்லால் நேருவின் உருவப்படம் காணப்படுகிறது.

இவற்றை இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. டி. நரசிம்மராவ் நேற்று வெளியிட்டுவைத்தார். (கி)

## ஆஸ்திரேலியா பொதுத் தேர்தல் ஆளுங்கட்சி தோல்வி!

மெல்போர்ன், மார்ச் 6

ஆஸ்திரேலிய ஆளுங்கட்சி பொதுத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளது. இக்கட்சியை எதிர்க்கட்சியான தொழிற் கட்சி தோற்கடித்தது.

பிரதமர் திரு. மல்கம் பிரேசர் ஆளுங்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக இருந்தார். இவர் தமது கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியை யடுத்து இராஜினாமாச் செய்துள்ளார்.

சுமார் 7 ஆண்டுகள் காலம் பிரேஸர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி அவுஸ்திரேலியாவின் ஆட்சிப் பொறுப்பை வகித்துவந்தது. [கி]

# பாப்பரசர் மீது மற்றுமொரு கொலைமுயற்சித் திட்டம்!

## உரியநேரத்தில் தவிர்க்கப்பட்டது

எல்சல்வடோர், மார்ச், 6

மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடோரில் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரைக் கொலை செய்ய வகுக்கப்பட்ட திட்டமொன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

எல்சல்வடோர் மத்திய அமெரிக்காவிலுள்ள ஒரு கத்தோலிக்க நாடாகும். தற்போது பாப்பரசர் மத்திய அமெரிக்க நாடுகளுக்கான 10 நாள் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின் ஓர் அங்கமாகவே அவர் எல்சல்வடோர் சென்றார்.

எல்சல்வடோரில் முறியடிக்கப்பட்ட அவர் மீதான கொலைச் சதியில் பதினெட்டுப் பேர் சம்பந்தப்பட்டிருந்தனர். இக்கும்பலைச் சேர்ந்த ஒருவர் மோட்டார் விபத்தொன்றில் சிக்கி இரு தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருந்தார். அந்த நபரைப் பொலிசார் இறக்கும் தறுவாயில் விசாரணைசெய்தனர். அப்போதே பாப்பரசர் மீது கொலைச்சதி மேற்கொள்ளப்பட்டது தெரியவந்தது.

அந்த நபர் கொடுத்த தகவலையடுத்து பொலிசார் உடன் செயலில் இறங்கினர். இதையடுத்து அச்சதியும் முறியடிக்கப்பட்டது.

பாப்பரசர் விஜயம்செய்து வரும் மத்திய அமெரிக்க நாடுகள் பல கொந்தளிப்பு நிலையில் இருந்துவருகின்றன. அவற்றில் எல்சல்வடோரும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. இந்த கைய கொந்தளிப்பு நிலைகளைத் தணிக்கச்செய்வதாக பாப்பரசர் விஜயம் அமையுமென்று பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இதுவரை பாப்பரசர் சென்ற மத்திய அமெரிக்க நாடுகளில் லட்சக்கணக்கானவர்கள் அவருடன் சேர்ந்து ஆராதனைகளை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## ஐ. நா. செயலர் மகாபலிபுரம் விஜயம்!

சென்னை மார்ச். 6

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப் பொதுச் செயலாளர் திரு. ஜேவியர் பெரஸ்டி குயலர் சென்னை வந்திருந்தார் இவருடன் இவரது பாரியாரும். 15 ஐ. நா. ஸ்தாபன பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

திரு. குயலர் மகாபலிபுரம் சென்று வரலாற்று முக்கியம் வாய்ந்த அம்சங்களைப் பார்வையிட்டார். அங்கு வைத்து அவர் வழங்கியபேட்டியொன்றில் "இந்தியாவின் தலைமை அணிசேரா இயக்கத்தை உறுதியுடன் கொண்டு செல்லும் அணிசேரா இயக்கம் பிரச்னைகளைத் தீர்க்கும் வழிமுறைகளை மட்டும் தெரிவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இதனால் அங்கத்துவ நாடுகள் அந்த வழிகாட்டல்களைக் கொண்டு தமது பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும்" என்றார். (கி)

## தமிழக 'பட்ஜட்'

(சென்னை)

தமிழ்நாடு அரசின் 1983/84ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் 185 கோடி ரூபா துண்டுவிழுகிறது.

நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கடந்த சனிக்கிழமை காலை வரவு செலவுத்திட்டத்தினை சபையில் சமர்ப்பித்தார். இத்திட்டத்தில் 26 கோடி ரூபாவுக்கு புதிய வரிகள் விதிக்கப்பட்ட வேளை 1 கோடி ரூபாவுக்கு மாத்திரம் வரிச்சலுகை விதிக்

(7ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

ஆறுகளில் நீர் பிறருக்காகப் பாய்கின்றது. பசுக்கள் பிறருக்காகப் பால் சுரக்கின்றன. மரங்கள் பிறருக்காகக் கனி தருகின்றன. இங்ஙனமே நல்லவர்களின் செல்வமும் பிறருக்குப் பயன்படுகிறது.

—அமர நீதிகள்

# நமது நோக்கு

## ஆண்டிகள் மடம்?

இன்று புதுடில்லியில் ஆரம்பமாகும் ஏழாவது அணி சேரா மாநாடு ஆண்டிகள் மடம் கட்ட முயற்சித்த கதைபோல்முடியுமா?

101 நாடுகள் கொண்ட இந்தப் பிரமாண்டமான இயக்கம் இன்றும் 'கதை' பண்ணும் 'கடை'போலவே காட்சியளிக்கின்றது.

ஐ. நா.வின் ஒரு சிறு பிரதியென்ற வகையில் செயற்படும் இவ்வியக்கம் பல பிரச்னைகளைத் தம் தலையில் போட்டுக்கொள்வதும், அவற்றிற்குத் திடமான தீர்க்கம்காணமுடியாது தத்தளிப்பதும் உலக ஸ்தாபனத்தின் பாங்கென்று கணிக்கலாம்.

சென்ற வாரம் கூடிய சுமார் 60 வெளிவிவகார அமைச்சர்கள் மூன்று நாட்களாக இரவும் பகலும் பேசியது கம்பூச்சியா. என்ன மடமை?

பொறுமை, விடா முயற்சி போன்ற பண்புகளைக் கடைப்பிடித்து எடுத்த சுமுகமான, உறுதியான முடிவு, இவ்விடயத்தை மாநாட்டில் பேசுவதில்லையென்பதே!

'பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை' என்று முன்கூட்டியே உணர்ந்திருந்தவர் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி. சென்ற மாநாட்டைப்போல் இன்றும் கம்பூச்சியாவின் இடம் காலியாகவே இருக்க வேண்டுமென்று மூன்று நாள் விவாத விரயத்துக்கு முன்னரே முடிவுகட்டி இருந்தவர் இந்திரா.

எந்த விடயத்திலும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசும் வல்லமைபடைத்த இந்தியப் பிரதமர், துண்டுகள் மூன்றுமிருக்கும் என்ற முன்உணர்வு படைத்தவர்.

நீண்டநேரம் விவாதித்தும் ஒரு முடிவுக்கு வர முடியாத வெளி விவகார அமைச்சர்கள் அதுபற்றி வாய்மூடி மௌனியாகி இருக்கவேண்டுமென்ற தீர்ப்பை அகில உலகும் வரவேற்கும்.

இன்று உலகம் அமைதி இழந்த நிலையில், உலகப் போர் ஒருபுறம், பொருளாதார வீழ்ச்சியும் பட்டினியும் மறுபுறம்; இவ்விரண்டிற்கும் இடைநடுவில் மசியும் உலகமக்கள் டில்லி மாநாட்டை மிக முக்கியமாக அவதானிப்பது தவிர்க்க முடியாத காரியம்.

உலக மக்கள் என்று நாம் சொல்லும்போது, உலகின் பெரும்பான்மையான வறிய மக்களையே கருதுகின்றோம்.

வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கணிசமான மக்கள் தொகை வறுமை வாழ்வையே கொண்டிருக்கிறது.

இந்த ஆபத்தான நிலையில் பேச்சைக் குறைத்து அதில் உள்ளொளி பெருகக் கூடிய ஆலோசனைகள் கிட்ட வேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.

எடுத்த எடுப்பிலேயே எங்கள் நாட்டு ஜனாதிபதி இதனை வற்புறுத்தியிருப்பது மிகப் பொருத்தமானது.

இலங்கை அரசு தனது வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் திண்டாட்டம் கண்டுள்ளது. அணிசேராமாநாடு பின்போடப்பட்டதுபோல் சென்ற ஆண்டு இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய பட்ஜட் இன்றும் ஆராய்ச்சிக்குள்ளாக இருக்கிறது.

நிதியமைச்சர் ரொனி டி மெல் அண்மையில் கூறியது போல் எங்கும் இப்பதவி வகிக்கும் பேர்வழிகள் இக்கட்டான வாழ்வுக்கு இலக்கானவர்கள்.

இதனை நன்குணர்ந்த ஜனாதிபதி ஜெயவர்த்தன மகாநாடு ஆரம்பமாக முன்னரே தம் அந்தரங்க ஆலோசனையைப் பிரகடனப்படுத்தியிருப்பது பொதுவாக வரவேற்கப்பட்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சியடைந்த மேற்கத்திய நாடுகள் அணிசேரா நாடுகளைப் பரிகாசமாக நடத்தி வருவதற்குக் காரணமுண்டு. இதனை நன்குணர்ந்தவர்களில் இந்திரா முதன்மை பெற்றவர். அவர் தலைமையில் விவகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு செயலில் பரிணமிக்குமென்று நம்ப இடமுண்டு.

இன்றைய பொருளாதார நெருக்கடி செல்வநாடுகளையும் பாதித்திருக்கிறது. பாலுக்குச் சருக்கரை இல்லாத, காலுக்குச் செருப்பில்லாத பாங்கு அவைகள் நிலை. மூன்றும் உலகமென்றால் கூழுக்குப் பிள்ளாத நிலை; உண்மையில் கூழே கிடைக்காத நிலை.

தங்கள் வளர்ச்சி எள்ளளவும் குன்றுவதை விரும்பாத தொழில்வள நாடுகள், தங்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் குறைவடையச் செய்யும் வழிகள் எதனையும் ஆதரிப்பார்களா?

இறக்குமதியைக் கட்டுப்படுத்தியும் ஏற்றுமதிக்கு இட்டவில்லை சட்டமென்றும் வீரம் பேசும் நிலையை நிரந்தரமாக்கிக்கொள்ள முயலின்றனர்.

இந்தச் சின்னஞ் சிறிய இலங்கை, இறக்குமதிக்குத் தாராள வழிவகுத்து, ஏற்றுமதிக்குரிய உற்பத்தியில்லாமலும், உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாமலும் தத்தளிக்கின்றது.

சுடலை ஞானத்தில் நம்பியிருக்கும் இத்தேசத்தின் ஜனாதிபதி உடனடி நிவாரணத்துக்கு ஒருவழி கண்டுபிடிக்க ஆலோசனையில் மூழ்கியது எவ்வகையிலும் வியப்பல்ல.

"அணிசேரா அங்கத்தவர்கள் கொண்ட ஒரு செயற்குழு இந்தியப் பிரதமர் தலைமையில் இயங்க வேண்டும்; அக்குழு, தனது பொருளாதார அறிவும், செயலாற்றும் ஆற்றலும் கொண்டு தொழில்வள நாடுகளுடன் தொழில், வர்த்தக ரீதியில் நியாயமான அடிப்படையில், வறிய நாடுகளுக்கு உடனடி நிவாரணம் பெறும் வகையில் செயற்படவேண்டும்".

இதுவே இலங்கையின் வேண்டுகோள்; இதனை ஆழமாக ஆராய்ந்து நற்பயன் அடைய வேண்டுமானால், இந்தியப்பிரதமரின் தலைமை அவசியமென்பதும் ஒத்துக் கொள்ளவேண்டும். அணிசேரா நிலை ஒரு பதிவிரதையின் நிலை.

அவரைப் பின்பற்றி மற்றைய அங்க நாடுகளும் அரசியல் கபடத்தை அரசியல் தந்திரமாக மாற்றி, ஒன்று பட்டால் வல்லரசுகள் வளத்தில் வர வழி பிறக்கும்.

# அணிசேரா மாநாடு

## புதுடில்லி விழாக்கோலம்!

புதுடில்லியிலுள்ள 'விக்யன்பவன்' என்ற கட்டிடத்திலேயே 7-வது அணிசேரா உச்சிமகாநாடு இன்று ஆரம்பமாகின்றது. இந்தக்கட்டிடம் ஒரு விஞ்ஞானக்கலை நிறுவனமாகும்.

மகாநாட்டின் பொருட்டு புதுடில்லி விழாக்கோலம் பூண்டுள்ளது. புதுடில்லி நகர மத்தியில் உள்ள இக்கட்டிடம் வர்ணம் தீட்டப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி தருகிறது. விசேட தொலைத் தொடர்பு பொதுசனத் தொடர்பு வசதிகள் யாவும் இக்கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

இக்கட்டிடச் சுற்றுடலை ஆயுதந்தரித்த பாதுகாப்புப்படையினர் காவல் செய்து வருகின்றனர். இதேவேளை பயங்கரவாதிகளைமுறியடிக்கும் விசேட 'கமாண்டோ' அணியினர் மகாநாட்டுப் பிரதிநிதிகள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் நிறுத்தப்பட்டுள்ளனர். இந்த அணியினருடன் 'ஆசியாட்' டின்போது விளையாட்டு வீரர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய 'கமாண்டோக்'களும் செயல் படுவர்.

### உணவு

அராபிய, ஆபிரிக்க அவுஸ்திரேலிய உணவு வகைகளுடன் இந்திய உணவு வகைகளும் மகாநாட்டுப் பிரதிநிதிகளது விருந்துபசாரங்களில் பரிமாறப்படும். இதற்கென அவுஸ்திரேலியா, மத்திய கிழக்கிலிருந்து விசேட உணவு வகைகள் தருவிக்கப்பட்டுள்ளன.

### போக்கு வரத்து

பிரதிநிதிகளின் போக்குவரத்துக்கென ஆடம்பர 'பென்ஸ்' கார்கள் தருவிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் விசேட ஆடம்பர பஸ்களும் சேவையிலீடுபடுத்தப்படும்.

'மேர்சிடெஸ் பென்ஸ்' கார்கள் புதுடில்லி வீதிகளில் நடமாடவிருப்பது இங்கு வழக்கத்திற்கு மாறாக இருக்குமென்று தெரிவிக்கப்பட்டது. ஏனெனில் புதுடில்லி உட்பட இந்தியாவின் முக்கிய நகரங்களில் இந்தியாவில் தயாரான கார்களையே தனியார்களும், டாக்ஸிகாரர்களும் வைத்துள்ளனர். இக்கார்கள் சுமார் 3ம் வருடங்களுக்கு முன்னர் வடிவமைக்கப்பட்டது போலவே இப்போதும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### பொதுசனத் தொடர்பு

உலகின் சகல பாகத்திலுமிருந்தும் 900 பத்திரிகையாளர்கள் மகாநாட்டுக்கு வருகின்றனர். இந்தியாவிலிருந்து மட்டும் 600 பேர் கலந்து கொள்கின்றனர். மகாநாட்டு மண்டபத்தினுள் இவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மண்டபத்தின் அருகில் உள்ள கட்டிடமொன்றில் விசேட கட்டிடத்தில் இவர்களுக்கென தொலைக்காட்சியில் மகாநாட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். அதிலிருந்தே இவர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

### மொழிபெயர்ப்பாளர்

மகாநாட்டு மொழிபெயர்ப்பாளர்களில் அநேகமானவர்கள் பெண்கள் பிரிட்டிஷ் நிறுவனமொன்று இவர்கள் சேவையை வழங்கியுள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, அராபி ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்புகள் இடம்பெறும்.

சுமார் 7 கோடி காகித தாள்கள் மகாநாட்டின் எழுத்து வேலைகளுக்கென பயன்படுத்தப்படும்.

### தலைவர்கள் வருகை

மகாநாட்டு மண்டபத்துக்கு வரும் ஒவ்வொரு நாட்டுத் தலைவரும் காரிலிருந்து இறங்கி வாயிலிலுள்ளவர்களிடம் கைகுலுக்கி உள்ளே நுழைய சரியாக 15 நிமிடங்கள் எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 4000 பிரதிநிதிகள் மகாநாட்டு மண்டபத்தினுள் அமர்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மகாநாட்டு மண்டபத்துக்கு செல்லும் வீதிகளிலுமுள்ள மரங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீதியோரங்களில் நடுகளில் கொடிகளுடன் அலங்காரமரச் செடிகளும் நாட்டப்பட்டுள்ளன.

### தலைவர்களின் மனைவியருக்கு

மகாநாட்டுக்கு வரும் தேசத் தலைவர்களில் 12 பேரே தமது பாரியார்மாரை அழைத்துவருகின்றனர்.

தலைவர்களின் பாரியார்களுக்கென விசேட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வரலாற்று முக்கியம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடல், இயற்கைக்காட்சிகளைப் பார்வையிடல் ஆகியன இந்த நிகழ்ச்சிகளில் அடங்குகின்றன. இவற்றுடன் இந்திய ஆடை, அணிகலன்கள் பற்றிய கண்காட்சியொன்றும் இவர்களுக்கென ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

மாலை வேளைகளில் விசேட விருந்துபசாரங்களுடன் கலாசார நிகழ்ச்சிகளும் இவர்களுக்கென நடத்தப்படும்.

### ஒரேயொரு பெண்வெளிவிவகார அமைச்சர்

7வது உச்சி மகாநாட்டில் பெண்வெளிவிவகார அமைச்சர் ஒருவரும் பங்குகொள்கிறார். இவர் பெயர் மரியோ டூ நஸிமென்டோ என்பதாகும். மேற்கு ஆபிரிக்க கரையை அடுத்துள்ள சாவோடோம் என்ற தீவை இவர் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

--அனந்த்

## போற்ற வேண்டிய சேவைகள்

இக்காலத்தில் சமயச் சேவைகள், மக்கள் சேவைகள் கூட ஏதாவது 'சுயநலத்தின் அடிப்படையிலேயே அதிகமாக செய்யப்படுகின்றன, ஆனால் ஒரு கிராம மக்கள் தமது பணத்தைச் செலவு செய்து பொதுமக்களுக்கான சேவையைச் செய்கின்றார்கள் என்றால் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது,

மண்டைதீவு துறைமுகத்திலிருந்து பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயம்சுமார் பத்து மைல்கள் தூரத்தில் நடுச் சமுத்திரத்தில் இருக்கிறது. ஒரு யந்திரப்படகு இங்கு சென்று திரும்புவதாயின் சுமார் நாலு மணி நேரம் செல்லும் இதற்கு தற்பொழுது குறைந்தது நூறுரூபா எண்ணைச் செலவு ஏற்படும், அப்படியிருந்தும் புனித தேவாலயத்திற்குச் செல்லும் பக்தர்களை மகிழ்விக்கும் வகையிலும் வசதி குறைந்த மக்களும் ஆலயம் தரிசிக்க உதவும் வகையிலும் தமது கஷ்டத்தையோ, நஷ்டத்தையோ பாராது மண்டைதீவு படகுச் சொந்தக்காரர்கள், கடற்றொழிலாளர்கள் பாலதீவு உற்சவத்திற்கு இலவச படகு சேவைகளை நடத்துவது மகிழ்ச்சிதருவதாகும், இறங்குதுறை வசதி குறைந்த துறைமுகமாக இது இருந்தபோதும் சிறிய படகுகள் மூலம் பெரியபடகுகளுக்கு யாத்திரீகர்களை ஏற்றி இறக்குவதே ஒரு பெரிய சங்கடமான தொண்டு இதை இப்பகுதி இளைஞர்கள்சிரமேற்கொண்டு பெண்களையும் குழந்தைகளையும் படகுகளில் பக்குவமாக ஏற்றி இறக்குவது பெருந்தொண்டாகிறது. இது மட்டுமல்ல இத்துறைமுகத்தில் வந்திறங்கும் மக்களுக்குப் போகும்போதும், வரும்போதும் குடிநீர் வசதிகள் இலவச உணவு வசதிகளைச் செய்து கொடுக்கவும் இம்முறை இக்கிராமமக்கள் முன்வந்துள்ளது பெரும் பணியாகியுள்ளது. இவர்களது இந்த ஆன்மீக, சிரமதான, நல்லெண்ணப்பணியை சகல மனிதகுலமும் பின்பற்றவேண்டும். பாலைதீவு உற்சவத்திற்கு இலவச படகுச்சேவை பலவருடகாலமாக நடைபெற்றுவருகிறது. இதேபோல, படகுச் சொந்தக்காரர்களது இப்பணியை

# மக்கள் கருத்து

இக்கிராமத்திலுள்ள வாகனச் சொந்தக்காரர்களும் நல்லூர் உற்சவத்தின்போது பின்பற்றினர். மண்டைதீவிலிருந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு இக்கிராம மக்களை இலவசமாக ஏற்றி இறக்கியதன் மூலம் நல்லூர் தேர்த்திருவிழாவிற்குச் செல்ல வசதியற்றிருந்த பல மக்கள் கடந்த திருவிழாவிற்கு வந்து முருக தரிசனம் பெற்றுச் செல்ல வசதியேற்பட்டது,

இந்தத் தாராள மனப்பான்மைவாகனச் சொந்தக்காரர்களுக்கும்ஏற்பட்டதுஇக்கிராம மக்களின் தொண்டு உள்ளத்தையும், சேவை மனப்பான்மையையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இதே போல வேலணை சாட்டியில் வருடா வருடம் நடக்கும் சாட்டி சித்திரைமாத ஆலய உற்சவத்திற்கும் மண்டைதீவிலிருந்து சாட்டி வரை இலவச வாகன சேவையை நடத்த மண்டைதீவு தனியார் வாகன உரிமையாளர்கள் ஆலோசித்துள்ளதாக ஒரு வாகன உரிமையாளர் கூறினார்.

சி. பாலசிங்கம்,

மண்டைதீவு-4.

வடபிரதேச போக்கு வரத்துசபை:

# எம்.பி.க்களின் சிபார்சில்காலி இடங்களைநிரப்ப நடவடிக்கை

## மக்கள் தொடர்பு அலுவலர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச போக்குவரத்து சபையில் காலியாக உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் எடுத்து வருகிறார். யாழ். மாவட்ட வேலைவங்கி மூலம் அனுப்பப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பெயரிலேயே இந்த வெற்றிடங்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட இருக்கிறது''

இவ்வாறு வடபிரதேச போக்குவரத்துச்சபை மக்கள் தொடர்பு அலுவலர் திரு. க. தனபாலசிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

யாழ் மாவட்ட வேலைவங்கி இதற்கான பெயர்ப்பட்டியலை வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் ஆளணிமுகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ளது. நேர்முகப்பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெற இருக்கின்றது,

முதல் நடவடிக்கையாக கடந்த பல வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் பஸ் நடத்துனர்களாககடமையாற்றி வந்த சுமார் இருபத்தைந்து இளைஞர்கள் பொறியியல் பகுதியிலும், சாலைகளிலும் நிரந்தர ஊழியர்களாக நியமனம்பெற இருக்கின்றனர். அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்தவாரம் நடைபெற்றது.

சபையில் பாதுகாவல் பகுதியில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களும் இம்மாத இறுதிக்குள் நிரப்பப்படவுள்ளன. இவ்வெற்றிடங்களுக்கு யாழ் மாவட்ட வேலைவங்கியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் இருந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுடன் நியமனங்கள் வழங்கப்படும்'

சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் சிறந்த பஸ் சேவையை அளிப்பதற்காக சில நடவடிக்கைகளை எடுத்து வரும் அதேநேரத்தில் சபையின் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்தியும் உள்ளார். அத்துடன் சபையின் வாகனங்களால் வீணாக ஏற்படும் எரிபொருட் செலவுகளையும் கட்டுப்படுத்தியுள்ளார்.

மத்திய போக்குவரத்து சபையின் நிதிநிலைமை மோசமடைந்துள்ளதால் அண்மையில் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பிராந்திய சபைத் தலைவர்களின் கூட்டத்தில் மத்தியபோக்குவரத்துச் சபை தலைவர் திரு. விக்டர் ரூபசிங்கா திறைசேரியிடமிருந்து எதுவித உதவிகளையும் எதிர்பாராது லாபநட்டமற்ற ஒரு வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்படி பிராந்திய சபைத்தலைவர்களைப் பணித்தார். அத்துடன், பிராந்திய சபைகள், சுதந்திரமான சபைகளாக தொடர்ந்தும் திறைசேரியிலிருந்து எதுவித பண உதவிகளையும் எதிர்பாராமல் செயல்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இக்கோரிக்கையின் அடிப்படையில் செயல்படுவது பற்றி ஆலோசிக்க, தலைவர் திரு. எஸ் கனகரத்தினம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகளைக் கொண்ட மகாநாடு ஒன்றைக்கூட்டி கொழும்பு மகாநாட்டின் தீர்மானங்களை அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் சுமார் 150 சாரதிகள் தேவைக்கு மேலதிகமாக உள்ளனர். இவர்களை சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு செல்வதற்கு அனுமதிப்பதற்கும் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார். (க)

### கைலாசபதி உருவப்படம் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதியின் உருவப்படம் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பகுதியில் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

உருவப் படத்தினைத் திரைநீக்கம்செய்துவைத்துப் பேசிய துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன், 'யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது பேராசிரியரான அமரர் கைலாசபதி தமிழ்த் துறைக்கும், யாழ். பல்கலைக்கழகத்திற்கும் ஆற்றிய தொண்டு காலத்தால் அழியாததென்றும், அவரது சேவையினை முழுமையாகப் பெறமுடியாதது எமது துரதிர்ஷ்டமான நிலை' என்றும் தெரிவித்தார்.

திருமதி கலையரசி சின்னையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் கா. இந்திரபாலா, கலாநிதி ஆ. சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள். [சூ]

### ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.

6-01 குழந்தைகளுக்கான விசேட நிகழ்ச்சி (சிங்களம்).

6-30 குழந்தைகளுக்கான கல்வி நிகழ்ச்சி (ஆங்கிலம்).

7-00 செய்தி மஞ்சரி (தமிழ்).

7-14 நாளைய நிகழ்ச்சிகள்.

7-15 1983 வரவு செலவுத் திட்டம் பற்றிய கண்ணோட்டம்.

7-45 அரச தம்பதிகள் சார்ல்ஸ்-டயானா காதல் கதை (ஆங்கிலம்).

8-15 செய்தி மஞ்சரி (சிங்களம்).

8-29 நாளைய நிகழ்ச்சிகள்.

8-30 அரச தம்பதிகள் (தொடர்ச்சி).

9-00 தகவல் பகுதியிலிருந்து ஒரு நிகழ்ச்சி. (சிங்களம்)

9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்).

9-45 ஆங்கில விசேட நிகழ்ச்சி.

10-40 ஒளிபரப்பு முடிவு.

### நிறுவை, அளவை பயிற்சி வகுப்பு

(புலோலி)

பாவனையாளர்களின் நன்மை கருதி பருத்தித்துறை புலோலி வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலயத்தில் நிறுவைகள், அளவைகள் தொடர்பான பயிற்சி வகுப்பொன்று நடத்தப்பட்டது.

யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இவ் நிறுவைகள், அளவைகள் பயிற்சி வகுப்பு உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. எஸ். ரீ. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பிலே நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகள் எவ்வாறு தவறான முறையில் கையாளப்படுகின்றன எனவும், அவற்றை எவ்வாறு கையாளவேண்டும்; பிழைகளை எப்படித் தெரிந்துகொள்ளவேண்டும் என்பன பற்றி பாவனையாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (க)

### சட்டவைத்திய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முகம் இராஜரத்தினம் அல்லது கண்ணன் என்பவரை 82 ஒக்டோபர் 12-ல் கத்தியால் வெட்டிக்கொலை செய்ததாக கணபதிப்பிள்ளை தேவராஜா, சின்னத்தம்பி நவரத்தினம், கணபதிப்பிள்ளை செல்வராஜா, கணபதிப்பிள்ளை அர்ச்சுனன், கணபதிப்பிள்ளை இராஜதுரை, ஆறுமுகம் சோதிலிங்கம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் முதலாவது சாட்சியாகக் குறிப்பிடப்பட்டிருந்த சட்டவைத்திய அதிகாரி சமுகமளிக்காமையால் விசாரணையை ஏப்ரல் மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் வி. என். நவரத்தினம், ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆர். ஜே. செல்வரத்தினம், எஸ் ஸ்ரீதரன் திருமதி கமலா சொர்ணலிங்கம் ஆகியோர் ஆஜராகினர். (க)

### 'சைவத்தை நம்பியவர்கள் நன்றாக வாழ்கிறார்கள்'

--ஸ்ரீசுப்பிரமுனிய

[சுழிபுரம்]

''சைவசமயம் மிகவும் அநாதியானது. எமது முழு முதற் கடவுள் சிவபெருமானே. நாம் சிவனை வணங்கி முத்தியின்பம் பெறுவோம். சைவசமயத்தை அழிய விடாது காப்பது சைவர்களாகிய நம் ஒவ்வொருவரது கடமையுமாகும். சைவ சமயத்தில் மந்திர தந்திரம் ஒன்றும் இல்லை. நம்பியவர்கள் நன்றாக வாழ்கின்றனர், சிவன் ஆலயத்தில் வழிபடும் பேறுபெற்றவர்கள் யாவரும் பாக்கியவான்கள வர்.''

இவ்வாறு சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்த ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் பேசுகையில் குறிப்பிட்டார். வரவேற்புவிழாவிற்கு ஆலயத் தலைவர் சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். சுவாமிகள் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டார்.

சுவாமிகள் மேலும் பேசுகையில், எமது முன்னோர்களால் கட்டிக் காக்கப்பட்ட சமயத்தை அழியவிடாது காப்பது எங்கள் கடமையாகும் என்றும் எமது சமயத்தை வளர்க்கத் தொண்டர்கள் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். திருவாளர்கள் பழனிச்சாமி, ஆறுமுகசாமி ஆகியோரும் உரையாற்றினர். [அ]

### பரிசளிப்புவிழா

[யாழ்ப்பாணம்]

மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம் பரிசளிப்பு விழாவும் பாரதி மலர் வெளியீடும் இன்று பிற்பகல் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சியாம் பிள்ளை கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக திருவாளர்கள் கி. தியாகராசா, பொ. சிவஞானசுந்தரம், க. வி. துரைசாமி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

திரு. பொ. சிவஞானசுந்தரம் பாரதி மலரை வெளியிடுவார்.

### 'ஆலால' சுகமடைய பிரார்த்தனை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தின் விசேட பொதுக்கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது இனம் தெரியாதவர்களினால் சுடப்பட்டு யாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சோப்பாம் எம்பியும், யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவருமான திரு. மு. ஆலாலசுந்தரம் விரைவில் சுகமடையவேண்டி இரண்டு நிமிட நேரமௌனப் பிரார்த்தனை நடைபெற்றது. சமாஜத்தலைவர் திரு. வி. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறைக்கு சேவையாற்றி வரும் திரு. ஆலாலசுந்தரம் சுடப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து உறுப்பினர்களில் பலரும் உரை நிகழ்த்தினார்கள்.

# அரசபதவி வெற்றிடங்கள்

### சிரேஷ்ட போதனாசிரியர்

இரத்மலானையில் நிறுவப்படவிருக்கும் தேசிய தொழில்நுட்ப கல்லூரிக்கு I. மரவேலை, II. உலோக வேலை, III. கட்டிடத் தொழில், IV. மின்சாரத் தொழில், V. மோட்டார் தொழில்நுட்பம் ஆகியவற்றில் சிரேஷ்ட போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி வயதெல்லை 30 தொடக்கம் 45 வரையாகும். குறிப்பிட்ட துறைகளில் அவர்கள் எதிர்பார்க்கும் தகைமை பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசித் திகதி வருகிற மார்ச் 15-ம் திகதி ஆகும்.

விபரங்களுக்கு பெப்ரவரி 18-ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

### நுண்ணாய்வு உத்தியோகத்தர்

சிறு கைத்தொழில் திணைக்களத்தில் நுண்ணாய்வு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க. பொ. த. (சாதாரண) தமிழ்/சிங்களத்தில் திறமைச் சித்தி உட்பட சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் லண்டன் பதிவியலாளர் நிலைப் பரீட்சையில் சித்தி, மற்றும் இலங்கை தொ. நு கல்லூரி அல்லது பல்தொழில் நுட்ப நிலையம் ஒன்றால் வழங்கப்பட்ட உயர்வணிக பத்திரம் அல்லது ஆணையாளரால் வழங்கப்பட்ட கணக்கியல் தராதரப்பத்திரம் என்பன வேண்டும். வயதெல்லை 25 தொடக்கம் 45 வயதுவரையாகும். விண்ணப்பிக்க கடைசித் திகதி வருகிற மார்ச் 18 ஆகும். விபரங்களுக்கு பெப்ரவரி 18ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

### அமைச்சர் தொண்டமான் கிளிநொச்சி விஜயம்

பால் பதனிடும் நிலையத்தை திறந்துவைப்பார்

(கரவெட்டி)

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் ஏப்ரல் மாதம் 7ம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார்.

கிளிநொச்சியில் பல லட்சம் ரூபா செலவில் நிறுவப்படும் பால் பதனிடும் நிலையத்தைத் திறந்துவைக்கும் முகமாகவே அவர் விஜயம் செய்கிறார்.

கிளிநொச்சித் தொகுதிக்கு வரும் அமைச்சர் தொண்டமான் திருநெல்வேலி உட்பட பல இடங்களுக்கு விஜயம் செய்வாரென்று தெரிவிக்கப்பட்டது'

கிளிநொச்சி பால் பதனிடும் நிலையம் திறந்து வைக்கப்பட்டதும் அங்கே நாளாந்தம் 10 ஆயிரம் லீட்டர் பால் பதனிடப்படும் என்றும் இது நாளடைவில் 20 ஆயிரம் லீட்டராக அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [க]

### மானிப்பாய் கி. ச. தலைவர் தெரிவு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிராமோதய சபையின் புதிய தலைவர்தெரிவு இம்மாதம் 13-ம் திகதி பிற்பகல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் விசேட சேவை உத்தியோகத்தர் திரு. சி. பொ. யோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்முறை தலைவர் பதவிக்கு பலத்த போட்டி ஏற்படும் என்றும், தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கு இப்போதிருந்தே பலர் தீவிர பிரச்சார வேலைகளை மேற்கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (க)

யாழ். மாவட்ட சுகாதார தொழிலாளர் நியமனம்:

# சிபார்சு செய்யுமாறு எம். பி.க்களுக்கு சிபார்சு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நிலவிவரும் சுகாதாரத்தொழிலாளர்களின் பற்றுக்குறையை போக்கு முகமாக விரைவில் சமயாசமய சுகாதாரத் தொழிலாளர்களை நியமிப்பதற்கு யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்பதவிகளுக்கு பொருத்தமுடைய தகைமை வாய்ந்த 10 பேர்களை சிபார்சுசெய்து அவர்களின் பெயர்ப் பட்டியல்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல தொகுதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களை யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பிரிவு நிர்வாக அதிகாரி திரு. பொ. இராசேந்திரம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

மேற்படி சுகாதாரத் தொழிலாளர்கள் பதவிக்கு கல்வித்தகைமை எதுவும் தேவையில்லை என்றும், இருப்பினும் கல்வித் தகமையுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும், இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றறிக்கையின் பிரதிகள் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் நிறுவனங்களுக்கும் அனுப்பி பிரிவிலுள்ள சகல வைத்திய வைக்கப்பட்டுள்ளது. (க)

# துப்பாக்கி முனையில் ரூ. 3,000 கொள்ளை

## வவனிக்குளத்தில் சம்பவம்

[துணுக்காய்]

ரூபா 3,000ரொக்கம் பறிக்கப்பட்டதுடன் இளைஞர் ஒருவர் படுமோசமாக தாக்கப்பட்ட சம்பவம் வவனிக்குளம் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

வன்னேரிக்குளம் பகுதியைச் சேர்ந்த வாலிபர் துணுக்காய் கல்விளான் பகுதியிலுள்ள தனது சகோதரிக்கு கொடுப்பதற்காக 3,000 ரூபா ரொக்கப் பணத்துடன் மாங்குளம் துணுக்காய் பிரதானவீதியால் தனியார் லொறி வண்டி மூலம் இரவு நேரம் வந்துள்ளார். அந்த லொறிவண்டியில் மேற்படி வாலிபரும் லொறிவண்டியின் சாரதியும், பாதுகாவலரும் தான் பிரயாணம் செய்தனர். அப்போது மாங்குளத்திலிருந்து 7வது மைல் தொலைவிலுள்ள வவனிக்குளம் காட்டுப் பிரதேசத்தில் துப்பாக்கிகள், கம்பிகள்சகிதம் பயமுறுத்தி லொறியை வழிமறித்து அதில்பிரயாணம் செய்த வாலிபரை தாக்கியதுடன், அவரிடமிருந்த ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச்சென்றனர்.


லொறிச்சாரதியையும், பாதுகாவலரையும் பயமுறுத்தியதுடன் அவர்களின் சேட் பொக்கட்டிலிருந்த சில்லறை காசுகளையும் எடுத்துச் சென்றனர். செல்லும் போது சத்த வெடி ஒன்று மேகத்தை நோக்கி சுட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இக் கொள்ளைச் சம்பவத்தில் 5 வாலிபர்கள் பங்கு கொண்டதாகவும் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்ததாகவும் கூறப்பட்டது.

இது சம்பந்தமாக மாங்குளம் பொலிசார் விசாரணைகளை மேற் கொண்டதுடன் கொள்ளையரைத்தேடி வலைவிரித்துள்ளனர்.

(வெ)


மீண்டும் கிடைக்கின்றது




ஜப்பானிய பம்ப் தெழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டெர்க்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

- ★ நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
- ✶ மண்ணெண்ணை கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
- ✶ மொத்த நிறை 28 கிலோ (61 றுத்தல்)
- ✶ ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு.
ஹேலீஸ் லிமிட்டெட்
25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

எமது யாழ் மாவட்ட ஏக விற்பனையாளர் :
கல்யாணி ஸ்ரோர்ஸ் 31, நியூ மார்க்கட், சுன்னாகம்.

Mel Ads


# யாழ். பொதுசன நூல்நிலைய நிதி அளித்தோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

| | |
|---|---|
| திருமதி குமாரசூரியர், சாம்பியா | 2,000-00 |
| யே. வி. துரைசிங்கம், சாம்பியா | 1,000-00 |
| இ. கே. இராசரத்தினம். சாம்பியா | 1,000-00 |
| ஏ. இரத்தினராசன், சாம்பியா | 1,000-00 |
| எஸ். சிவநேசன், சாம்பியா | 250,00 |
| க. புகழேந்தி, அமெரிக்கா | 13,061-00 |
| எம். எம். சிவசண்முகம், தமிழ்நாடு | 11,172-00 |
| எம். தம்பிப்பிள்ளை, மலேசியா | 1,000-00 |
| டாக்டர் ஏ. எஸ். சின்னத்தம்பி, புறூணை | 2,500-00 |
| பி. வல்லிபுரநாதன், நைஜீரியா | 2,000-00 |
| ஏ. செல்வராசா, நைஜீரியா | 3,000-00 |
| டாக்டர் மருதநாயகம், நைஜீரியா | 2,000-00 |
| என். ஜெகதீசன், நைஜீரியா | 1,500-00 |
| யே. ஆனோல்ட், நைஜீரியா | 3,000-00 |
| டாக்டர் எஸ். பாலச்சந்திரன், நைஜீரியா | 300-00 |
| திரு. திருமதி பேட், நான்கி, கனடா | 900-00 |
| எஸ். சிவநேசன், நைஜீரியா | 2,000-00 |
| கே. எஸ். ஆனந்தன், லண்டன் | 200-00 |
| சு. திரு. லண்டன் | 364-04 |
| பி. அகஸ்ரின், மேற்கு ஜெர்மனி | 7,206-00 |
| நலன் விரும்பி, ஜெர்மனி | 250-00 |
| பி. பி. காரியநாயகம், பாக்தாத் | 3,000-00 |
| இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத் | 500-00 |
| வட இலங்கை வர்த்தக சம்மேளனம் | 1,000-00 |
| தெங்கு-பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய் | 1,784-40 |
| றொட்டறிக் கழகம், மட்டக்களப்பு | 2,500-00 |
| இலங்கை புகையிலை ஸ்தாபனம், கொழும்பு | 10,000-00 |
| யாழ். வைத்தியசாலை நலன்விருத்திச் சங்கம் | 1,000-00 |
| கிளிநொச்சி மலேரியா, தடுப்பு இயக்கம் | 1,124-00 |
| தமிழர் இலக்கிய மன்றம், கணக்காய்வுத் திணைக்களம், கொழும்பு | 1,000-00 |
| ஸ்ரீலங்கா இஸ்லாமியக் காங்கிரஸ், கல்முனை | 1,000-00 |
| மக்கள் வங்கி நலன்விருத்திச் சங்கம், மாங்குளம் | 607-02 |
| விலைமதிப்பீட்டுத் திணைக்கள இந்துமன்றம் | 1,000-00 |
| இலங்கை புகையிரத திணைக்கள முத்தமிழ் மன்றம் | 250-00 |
| மக்கள் வங்கி, கன்னாதிட்டிக் கிளை, யாழ். | 30-00 |
| சுற்றன் தேசிய வங்கி, கொழும்பு | 50,000-00 |
| இலங்கை வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, கொழும்பு | 10,000-00 |
| சபுமால் பவுண்டேசன், கொழும்பு | 1,000-00 |
| சுங்கத் திணைக்களம், காங்கேசன்துறை | 100-00 |
| மக்கள் வங்கி, முல்லைத்தீவு | 425-00 |
| குருநாகல் சைவ மகாசபை | 6,290-00 |
| ஆட்டக்லைக் கழகம், கொழும்பு | 6,037-90 |
| இலங்கை வங்கிகள் ஊழியர் சங்கம் | 500-00 |
| குண்டன் மாக்ஸ், கொழும்பு | 5,000-00 |
| ஆண்டகை, கொழும்பு | 7,219-86 |
| கொழும்பு மெதடிஸ்தசபை | 10,400-00 |
| ஆண்டகை யாழ்ப்பாணம் | 10,000-00 |
| இளம் மாதர் கிறிஸ்தவ சங்கம் | 1,000,00 |
| இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கம் | 10,000-00 |
| ஜனாதிபதியின் நஷ்ட ஈடு | 900,000-00 |
| யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை | 3000,00-00 |
| சுற்றன் வைலன்ஸ் கல்லூரி நுவரெலியா | 1,000-00 |
| தனி நபர்களின் வரவு | 60,024-51 |
| யாழ். கொடித்தின வரவு | 209,972-84 |
| கொழும்பு நூலக வாரம் (வி. எஸ். ரி. குழு) | 519,041-31 |
| யாழ்ப்பாணம் சுவர்ணமுகியின் நிகழ்ச்சி வசூல் | 95,425-00 |
| கொழும்பு சுவர்ணமுகியின் நிகழ்ச்சி வசூல் | 60,026-47 |
| யாழ். மாநகரசபை உத்தியோகத்தர், ஊழியர்களின் சம்பளப் பட்டியலிலிருந்து அறவிடப்பட்ட பணம் | 19,566-00 |
| (தனியாக சபையில் வைப்பு) | |
| மொத்தத்தொகை | ரூ. 32,81,155-25 |

[மா]

நெடுந்தீவில்

## மகளிர் தின விழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் மகளிர் குழுக்கள் ஒருங்கிணைந்து நெடுந்தீவில் மகளிர் தின விழா ஒன்றை நாளை 8-ம் திகதி நடாத்தவுள்ளன. நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

மேற்படி கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மகளிர் குழுச் செயலாளர் திருமதி த. முத்துப்பிள்ளை, நெடுந்தீவுபிரதேச சபைத் தலைவர் திரு. சி. வ. சங்கரப்பிள்ளை, யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. சி. வேலாயுதபிள்ளை, மகளிர் குழுவின் யாழ். மாவட்டத் தலைவி செல்வி வேதவல்லி கந்தையா, பொதுமுகாமையாளர் திரு. இரா. தர்மலிங்கம் உட்படப் பலர் உரையாற்றுவார்கள்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. (அ)

தெல்லிப்பழையில்

## சர்வதேச மகளிர் தினம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழுவினதும், அளவெட்டி, மல்லாகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர்குழுவினதும் ஆதரவில் சர்வதேச மகளிர் தினம் நாளை கொண்டாடப் படவுள்ளது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் திருமதி சகிதேவி கந்தையா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை நிகழ்த்துவார்.

மற்றும் வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு க.மகாதேவா தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கத் தலைவர் திரு எஸ். சிவமகாராஜா, திருமதி வேதவல்லி செல்வரத்தினம், திருமதி சரஸ்வதிஅம்மா பொன்னுத்துரை ஆகியோர் உரையாற்றுவர்.

(க)

மனோகரா [யாழ். நகர்] தினசரி 5 காட்சிகள்
Staring
Roger Daltrey
Adam Faith
in
Mc Vicar
Strictly for Adults

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-00
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நான்

மேற்கிந்திய அணியை

# இந்தியா இன்னிங்ஸால் வெற்றிபெற்றது!

போர்ட் ஒப் ஸ்பெயின் மார்ச் 6

டிறினிடாட்டின் தலைநகரான போர்ட் ஒப் ஸ்பெயினில் நடைபெற்ற இந்திய மேற்கிந்திய கிரிக்கெட் பந்தயத்தில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

மேற்கிந்திய சுற்றுப்பயணத்தில் இரண்டாவது பந்தயமாக இந்த கிரிக்கெட் பந்தயம் விளங்கியது. நான்கு தினங்கள் இப்பந்தயம் நடைபெற்றது.

முதல் இன்னிங்ஸில் இந்தியா 6 விக்கட்டுக்கள் இழப்புக்கு 355 என இருந்தது. பின்னர் சகல விக்கட்டுகளையும் இழந்து 402 ஓட்டங்களை அது பெற்றது.

மேற்கிந்திய அணி முதல் இன்னிங்ஸில் 193 ஓட்டங்களையே பெற்றது. இதனை அடுத்து இந்தியா இன்னிங்ஸாக மேற்கிந்தியாவை ஆட அனுமதித்தது. இவ்வேளை மேற்கிந்தியாவால் 141 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இறுதியாக இந்தியா ஒரு இன்னிங்ஸாலும் 69 ஓட்டங்களாலும் மேற்கிந்தியாவை வென்றது.

இந்த மேற்கிந்திய அணி உத்தியோகப்பற்றற்ற அணி என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆசிரியர்கள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கல்விவட்டார ஆசிரியர்களுக்கான சுகாதாரக் கல்விக்கருத்தரங்கு இம் மாதம் 9ம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் வட மாநில கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை, வைத்திய கலாநிதி க. மாணிக்கம், யாழ். சுகாதார கல்வி உத்தியோகத்தர் திரு. கா. வைத்தீஸ்வரன், காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். (வெ)



# "சேவையை வாழ்வாக கொண்டவர்"

யாழ். மாவட்ட சாரண ஆணையாளரான திரு. கனகசபை சச்சிதானந்தன் தோற்றத்திலும் சரி, மனத்திலும் சரி அன்றிருந்தது போல கடைசிவரை மாறாது கோபம் என்பதே அறிந்திருக்க மாட்டார். யார் எக்கோபத்தில் பேசினாலும் பதற்றமடையாது சாந்தமாக பதிலளிப்பார். தனது கல்லூரியில் கல்விகற்கும் நேரம் தவிர்ந்த நேரத்தில் சாரணிய திற்காக தனது நேரத்தைச் செலவளித்ததுடன் சாரணிய வாக்குறுதி விதிகளுக்கு அமைய தனது வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அறிமுகமானவர். எவரைக் கண்டாலும் ஒருநிமிட நேரமாவது நின்று கதைத்து குசலம் விசாரிக்காது செல்ல மாட்டார். அன்பிலும் பண்பிலும் மிக உயர்ந்து விளங்கியவர். எவர் என்ன தவறு செய்தாலும் அவர்களை அழைத்து தவறை உணர்த்தி, திருத்துவதற்கு அறிவுரை கூறிவந்த நல்லாசானை இழந்துவிட்டது எமக்கு ஓர் பேரிழப்பு.

சாரணீயம், ஒரு புனித கட்டுக்கோப்பான பண்புகள் நிறைந்த கைங்கரியம். அதனை பாலர்கள் தொடக்கம் திரிசாரணர்கள் வரை வளர்த்து வருவது ஒரு பொறுப்பான கடமை அப்படி வளர்ப்பது ஒரு சிலரால்தான் முடியும். அப்படி சாரணீயத்தை தலைமை தாங்கிக்கொண்டு நடத்துவதற்கு உகந்தவனவாகக தேர்ந்தெடுத்தோம் இவரை. ஆனால் இயற்கை அன்னை உயர்ந்த பதவி கொடுக்கமுன்னர் அரவணைத்து விட்டாலே என் செய்வோம்!

சிரமதானங்கள், தொண்டுகள் அவை எங்கே நடந்தாலும் முழுமூச்சுடனே அவ்விடத்தில் எல்லோர்க்கும் முன்னின்று வழிகாட்டியாக விளங்கியவர். மகாதேவா தாம்போதியிலும், வைத்தியசாலை, பொதுமன்றங்கள் நிறுவனங்கள் ஆகியவற்றின் சிரமதானங்கள் ஆலயங்களில் நடைபெறும் தொண்டுகளிலும் தனது பங்கைச் செலுத்தியதுடன் எம்மையும் அவ்வழி நடக்கத்தூண்டியவர் அமரராகி விட்டமை எமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். 3வது தேசிய சாரணர் ஜம்போரியில் கலந்துகொண்ட அனைவரும் அரைக்கம்பத்தில் கொடியை பறக்கவிட்டு அநுதாபம் தெரிவித்த வேளையில் நாமும் எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

- இ. தவகோபால்

# இன்றைய பலன்

மாசி மாதம் 23-ம் திகதி
திங்கட்கிழமை
(7—3—83)

மேடம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் முன் வருவார்கள், சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தப்பட்ட நோய் உருவாகலாம், பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம்.

இடபம்: குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும், நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று சமரசமான முடிவைத் தேடித்தரும், காதலில் வெற்றி காண முடியும்.

மிதுனம்: வீண் செலவு வேண்டாம், விபரீதங்கள் உருவாகும், பெண்களின் காதலில் திகைக்கவைக்கும் சம்பவம் உருவாகும், பேச்சுவன்மையைக் கடைப்பிடிக்கவும்.

கடகம்: தருமகாரியங்களில் தாராளமாக மதிப்பு உயரும், சுற்றுடலில் மகிழ்ச்சியான தினம், பெற்றோர்உதவி உற்சாகத்தைக் கொடுக்கும்.

சிம்மம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையை உற்சாகப்படுத்தும், எதிர்பாராத விருந்தினர் வருகைக்கு இடமுண்டு, வெளியூர் தொடர்பு மகிழ்ச்சியைத் தரும்.

கன்னி: மனம்போல் வாழ்வு இன்று மலரும், கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கலாம்.

துலாம்: அன்னிய வாசம் ஆபத்தில் மாட்டி வைக்கும். சிறிய விடயத்திற்குக்கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள், உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும்.

விருச்சிகம்: ஆணவப்போக்கினால் நண்பர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள், மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடு ஆத்திரத்தை மூட்டும், பொறுமை நன்று.

தனுசு: உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு, கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், முயற்சியால் முன்னேற்றமுண்டு.

மகரம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும், எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படும், எதிலும் ஏமாற்றம் தென்படும், அரச பயத்திற்கு இடமுண்டு.

கும்பம்: வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் பெருகும், சிலருக்கு ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் பிறக்கும், ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாக இருக்கும்.

மீனம்: புத்திக்கூர்மையுடன் புதியஎண்ணங்கள் மனம்போல் மலரும், சகோதரர்களின் திருமண வைபவங்களுக்கு முயற்சி எடுக்கப்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

# சிறுவன் பரிதாப மரணம்

[பண்டத்தரிப்பு]

'டிராக்டர்' பெட்டிக்கு அடியில் அகப்பட்டு 7 வயதுச் சிறுவன் மரணமான சம்பவம் மூளாயில் நிகழ்ந்துள்ளது.

மூளாய் தெற்கைச் சேர்ந்த மகாலிங்கம் சுகந்தன் என்னும் மேற்படி சிறுவனின் மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரியும், உத்தியோகப்பற்றற்ற நீதவானுமாகிய திரு. கே. சேனாதிராசா நடத்தினார். அங்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களை அடுத்து மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார்.

# உபதபால் நிலையம் அமைக்க நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

அளவெட்டி கணேஸ்வரம் கிராமத்தில் உபதபால் நிலையமொன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இப்பகுதி மக்களின் கோரிக்கைக்கிணங்க மேற்படி கிராமத்தில் உபதபால் நிலையமொன்றை நிறுவ எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. அமிர்தலிங்கம் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இதன்பயனாக இக்கிராமத்தில் உபதபால் நிலையமொன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும், பின்னர் அதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

திரு. அமிர்தலிங்கத்திடம் இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுத்து இக்கிராமத்திற்கு விரைவில் உபதபால் நிலையம் கிடைக்க ஆவன செய்வதாக அவர் உறுதியளித்தார்.

# சிரமதானம்

[துணுக்காய்]

பாண்டியன்குளம் பகுதியைச் சேர்ந்த நட்டாங்கண்டால் கிராமத்தின் அரசாங்க வைத்தியசாலை சிரமதான மூலம் துப்பரவுசெய்யப்பட்டது. மூன்றுமுறிப்பு கிராமோதயசபைத் தலைவர் திரு. சு. தியாகராசா தலைமையில் இச் சிரமதானம் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பொது மன்றங்களின் பிரதிநிதிகள் உட்பட பல இளைஞர்களும், யுவதிகளும் பங்குபற்றினர்.

# தமிழக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருக்கிறது. சக்கரை, புகையிலை, இரும்பு உட்பட 13 வகை பண்டங்கள் மீது வரி வீதங்கள் கூட்டப்பட்டதுடன் பட்டு. எண்ணெய் எக்பனவற்றின் வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. [கு]

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் - கே.ஆர். விஜயா - சோ 5 — 7
மனம் ஒரு குரங்கு

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
(கலர்)

றீகல் (யாழ். நகர்)
கே. ஆர். விஜயா
மேயர் மீனாட்சி
விரைவில்
சட்டம் ஒரு இருட்டறை

சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30 (யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா தினசரி 10-00, 2-00, 6-00,9-30 (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி(கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
John Travolta in
URBAN COWBOY
11-3-83 முதல்
மகாசிவராத்திரி வெளியீடு!
சிவகுமார், சரிதா, சில்க் சுமிதா
வண்டிச்சக்கரம்
(கலர்)

சங்கானை ஆஸ்பத்திரியில்

# 3 டாக்டர்களுக்குப் பதிலாக ஒரே ஒரு டாக்டர்!

[பண்டத்தரிப்பு]

மூன்று டாக்டர்கள் கடமையாற்றிவந்த சங்கானை அரசினர் வைத்தியசாலையில் தற்போது ஒரேஒரு டாக்டர் மட்டுமே தனித்து கடமையாற்றி வருவதால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டாக்டர்சில மாதங்களுக்குமுன்பு வேறு இடத்திற்குஇடமாற்றத்தில் சென்றுவிட்டார். இதுவரை அவரின் இடத்திற்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

இங்கு கடமையாற்றிய மற்றொரு டாக்டர் குடும்பகட்டுப்பாட்டிற்கான பயிற்சிபெறுவதற்காக கடமைலீவில் சென்றுள்ளாராம்.

தற்போது ஒரேஒருடாக்டர் மட்டுமே சகல வேலைகளையும் தனித்து கவனித்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம்.

இங்கு நிரந்தர வைத்திய பொறுப்பாதிகாரி ஒருவரை நியமித்துதருமாறு சங்கானை கிழக்கு கிராமோதயசபைத் தலைவர் திரு. வி. செந்தில்நாதன் சுகாதார இணைக்கவமேலிடத்தை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார். (க)

## 17 சிறகுவலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தப்பட்டது குறித்து சந்தேக நபர் ஒருவர்மீது பொலிஸார் நடவடிக்கைமேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதன்எதிரொலியாக சாவகச்சேரியைச் சேர்ந்த மீனவர் குடும்பங்கள் பலதொழிலின்றி பாதிக்கப்பட்டுள்ளன.

## கடற்றொழில் பரிசோதகர்

### பிரச்னைகள் ஆராயப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் விரிவாக்க சங்க சமாஜத்தின் ஆண்டுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்சிறப்பாக நடைபெற்றது.

முன்னாள் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் சங்கத்தலைவர் திரு. ஏ. பிலிப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொதுவாக கடற்றொழில் பரிசோதகர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் குறித்தும் பிரச்னைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு மேற்கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பரிசீலனை செய்யப்பட்டது. மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் திரு. கே. வேலாயுதம் கடற்றொழில் பரிசோதகர்கள் நடவடிக்கைகள் பற்றியும் மேற்கொள்ளவேண்டிய நடை முறைகள் குறித்தும் விளக்கினார்,

சமாஜத்தின் புதிய தலைவராக திரு ஏ. பிலிப் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவர் திரு. வி. அருந்தவம், செயலாளர் திரு. எல். பி. பிலிப்.

## ஆஸி. தேர்தல்: தொழிற்கட்சி வெற்றி

[கான்பெரா]

அவுஸ்திரேலியாவில் 34 வருடகாலத்தில் 2வது தடவையாக தொழிற்கட்சி அரசாங்கம் இன்று பதவியேற்கவுள்ளது.

நேற்றுமுன்தினம் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் திரு. மல்கம்பிரேஸர் தலைமையிலான கான்சர்வேட்டிவ்கட்சியை திரு பொப்ஹோப் தலைமையிலான தொழிற்கட்சிதோற்கடித்தது. இதனையடுத்து திரு. மல்கம் பிரேஸர் தனது பிரதம மந்திரிப்பதவியை ராஜினாமாச்செய்யவுள்ளார். [வெ]

## நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் சிவராத்திரிவிழா

(மாவிட்டபுரம்)

சரித்திரப் பிரசித்திவாய்ந்த கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் இம்மாதம் 12 திகதி சிவராத்திரிவிழா வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தில் கடந்த 27ம் திகதி கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

மேற்படி உற்சவம் தொடர்ந்து இடம்பெற்று இம்மாதம் 12ம் திகதி காலை இரதோற்சவமும் மாலை முதல் நான்கு ஜாமமும் சிவராத்திரி உற்சவமும் இடம்பெறஉள்ளது. மறுநாள் தீர்த்தஉற்சவம் நிகழும். [ச]

## இப்படியும் நடக்கிறது

அது ஒரு அரசினர் வைத்தியசாலை.

இந்த வைத்தியசாலையில் சலம்சோதிக்கச் செல்லும் சலரோகக்கார நோயாளர்கள், தம்முடன் தீப்பெட்டி ஒன்றை எடுத்துச்செல்லவேண்டியிருக்கிறது.

தீப்பெட்டிக்கும் இந்த நோயாளர்களுக்கும் என்ன தொடர்பு என்று மண்டையை உடைக்காதீர்கள். சலம் சோதிப்பதற்கான 'ஸ்பிரிட்' விளக்கை எரியச் செய்வதற்கே தீப்பெட்டி தேவைப்படுகிறது.

சங்கானை நோயாளர்களுக்கு இப்படியும் ஒரு சோதனை.

— 'ஊடுருவி'

## ரூ. 1 லட்சம் நகை திருட்டு!

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற புகையிரத பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் வீட்டிலிருந்து ஒரு லட்சத்து பதினோராயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை மேற்கிலுள்ள ஜேம்ஸ் கிறிஸ்துதாஸ் தம்பிராசா என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் தியாகராசா விசாரணை செய்துவருகிறார். (மா)

## புதிய முத்திரைகள்

(கொழும்பு)

தமிழ் அறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளையின் சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் தாமோதரம்பிள்ளையின் 150-வது ஆண்டு நினைவு விழாவைக் கடந்த வருடம் செப்டம்பர் 12-ம் திகதிமுதல் ஓராண்டுக்கு இலங்கையில் கொண்டாடப்பட்டுவருவது தெரிந்ததே.

ஜனாப் என். எச். எம். அப்துல் காதரின் சேவைகளைக் கௌரவிக்குமுகமாக ஒரு முத்திரை வெளியிடப்படவிருக்கிறது.

இந்த இரு முத்திரைகளும் மே மாதம் 22-ம் திகதி வெளியிடப்படவிருக்கிறன.

## உமையாள்புரம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கூ. சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடத்திச் செல்லப்பட்ட காரின் முன்பக்கம் விபத்துக்குள்ளாகி சேதமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. காரில் சென்ற 5 நபர்களும் புதுக்குடியிருப்பு தேநீர்க்கடைஒன்றில் பாணும் தேநீரும் வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேநீர்க்கடை உரிமையாளரும், அந்த நேரம் புதுக்குடியிருப்புச் சந்தையில் நின்ற காவலாளி ஒருவரும் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

லொறி கடத்தப்பட்டபொழுது துப்பாக்கி இளைஞர்கள் சிங்களத்திலும், தமிழிலும் உரையாடினார்கள் என்றும், லொறியின் சாரதியும் கிளினரும் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இருவரும் வானுக்குள்ளிருந்து இறங்கிஓடினால்நிலைமை கவலைக்கிடமாகும் என்று பயமுறுத்தப்பட்டதாகவும் அவர்கள்தெரிவித்துள்ளனர். (மா)

## துரித ரயில்சேவை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கு மிடையிலான துரித கடுகதி ரயில் சேவை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்புகையிரதம் கொழும்பிலிருந்து காலை 5-45-க்குப் புறப்பட்டு காங்கேசன்துறையைப் பிற்பகல் 12-20-க்கு வந்தடையும்,

காங்கேசன்துறையிலிருந்து காலை 5-40க்குப் புறப்பட்டு கொழும்பை பிற்பகல் 12-15க்குச் சென்றடையும்.

ரயில் அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய புகையிரத நிலையங்களில் மட்டும் தரித்துச் செல்லும். [வெ]

## ஆறு கைதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து தப்பிய 4கைதிகளும் சிறைச்சாலை மதிலோரமாக ஒவ்வொருவர் தோள்களிலும் படிப்படியாகஏறி, கிடைத்த துணிகளைக் கொண்டு முடிச்சுப்போட்டு அதன் வழியாக மதிலின் பின்பக்கமாக இறங்கி ஓடிவிட்டார்களாம்.

சிறைக்கைதிகள் தப்பியோடியது சம்பந்தமாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல்கொடுக்கப்பட்டுள்ளது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## மரண அறிவித்தல்

### செ. இராமச்சந்திரன்

இராமச்சந்திரன், தொடந்துவா புகையிரதநிலைய அதிபர் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லையா ஆச்சிமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் தங்கம்மாவின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீரும் கலைவாணியின் அன்புத் தந்தையும், இராமேஸ்வரியின் அன்புச் சகோதரரும், சிவரட்ணம் சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் வண்ணார்பண்ணை ஓடை ஒழுங்கை, 17ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று திங்கட்கிழமை (7-3-83) பிற்பகல் 4 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

(6449)

## மரண அறிவித்தல்

### ச. மு. பேரம்பலம்

காரைநகர், களபூமியைச் சேர்ந்தவரும், நுகேகொடை பிரபல வர்த்தகர் ச. மு. பேரம்பலம் காலமாகிவிட்டார். அன்னார் ஐவனு ஸ்ரோர்ஸ் நுகேகொடை, குமரன் ரெக்ஸ்ரைல்ஸ் யாழ்ப்பாணம் ஆகியவற்றின் உரிமையாளர் ஆவார். இவர் சிதம்பரத்தின் அன்புக் கணவரும், அருளாம்பிகை, அருட்செல்வம் பாலசுப்பிரமணியம், கமலாதேவி, சிவபாதம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சபாரட்ணம், அருள் ரேடர்ஸ் கிளிநொச்சி, காலஞ்சென்ற இரத்த பரிசோதகர் நடராசா, சிவசுப்பிரமணியம், இராஜராஜேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீபாஸ்கரன், தயா, மஞ்சுளாதேவி, மனோரஞ்சனின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 8-3-83 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு திக்லை மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் வறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

6448

## மரண அறிவித்தல்

### கந்தையா சதாசிவம்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வண். வட மேற்கு, ஆனைக்கோட்டையில் வசிப்பவருமாகிய திரு. கந்தையா சதாசிவம் (ஓய்வு பெற்ற கலால் பகுதி உத்தியோகத்தர்) காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், பவளச்சந்திரன் (லண்டன்), யோகச்சந்திரன் (மஸ்கன்ஸ் லிமிட்டட், கொழும்பு), சந்திரமாலா, ஞானசந்திரன் (குவைத்-முன்னைநாள் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்), ஜெயசந்திரன், மோகனசந்திரன், சந்திரகலா, சந்திரநீலா, சந்திரஜீலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவர். அன்னரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக இன்று (7-3-83) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

(6445)


## ஹோம் பினன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பினன்ஸ் லிமிட், 82, கன்னதிட்டி வீதியிலுள்ள ஹோம் பினன்ஸ் ஸ்தாபனத்தில் பூகோடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பினன்ஸ் லிமிட்
82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பினன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.